நகராட்சி அலுவலகம்,
களக்காடு.

நாள். 26.07.2023.

களக்காடு நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2023ம் வருடம் ஜூலை மாதம் 31ம் தேதி திங்கள் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

**முன்னிலை: திருமதி. கா. சாந்தி, எம்.ஏ., பி.எட்.,**
**நகர்மன்ற தலைவர்**
**களக்காடு நகராட்சி.**

<table>
<tr><th>நாள்.</th><th>தீர்மான எண்.</th><th>மன்ற பொருள்</th><th>மன்றத்தின் முடிவு</th></tr>
<tr><td>31.07.2023</td><td>332</td><td><u>பொருள் எண். 01</u><br>களக்காடு நகராட்சி தொடர்பாக கீழ்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு சம்பந்தப்பட்ட நாளிதழ் நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட பட்டியலின்படி, நகராட்சியின் வருவாய் பொதுநிதியிலிருந்து தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நாளிதழின் பெயர்</th><th>பட்டியல் எண் மற்றும் தேதி</th><th>பட்டியல் தொகை</th><th>விளம்பர வகை</th></tr>
<tr><td>1.</td><td>தினத்தந்தி நாளிதழ்</td><td>2324TVL37 1029247 31.05.2023</td><td>23688</td><td>தமிழக அரசின் ஈராண்டு சாதனைகளை பொதுமக்கள் அறியும் பொருட்டு விளம்பரம் செய்தல்.</td></tr>
<tr><td>2.</td><td>தினச் சூரியன் நாளிதழ்</td><td>7691 / 07.06.2023</td><td>14784</td><td>திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 விதி எண். 3(8)ன் கீழ் வழங்கப்பட்ட அறிவிப்பு.</td></tr>
<tr><td>3.</td><td>தினச் சூரியன் நாளிதழ்</td><td>7689 / 07.06.2023</td><td>14784</td><td>கழிவுநீர் கொண்டு செல்லப்படும் வாகனங்கள் பதிவு செய்வது தொடர்பாக அறிவிப்பு.</td></tr>
</table></td><td>அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>4.</td><td>Evening<br>Tamil Nadu</td><td>0871 / 2023 – 10.06.2023</td><td>14490</td><td>2022–2023 ஆம் ஆண்டில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்த விளம்பரம்.</td></tr>
<tr><td>5.</td><td>மாலை தமிழகம்</td><td>5922 / 2023–24 – 07.06.2023</td><td>15330</td><td>2022–2023 ஆம் ஆண்டில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்த விளம்பரம்.</td></tr>
<tr><td></td><td></td><td>மொத்தம்</td><td>83076</td><td></td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u>
களக்காடு நகராட்சி தொடர்பாக மேற்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு பெறப்பட்ட பட்டியல் தொகையின்படி சம்பந்தப்பட்ட நாளிதழ்களின் நிறுவனங்களுக்கு ரூ. 83076/–ஐ நகராட்சி வருவாய் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.07.2023</td>
<td>333</td>
<td>
<u>பொருள் எண். 02</u>
களக்காடு நகராட்சியில் நகர்மன்ற தீர்மான எண். 304, நாள். 31.03.2023ன்படி அனுமதிக்கப்பட்டதின்படி, அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான இனங்களுக்கு உரிமையாணை கட்டணம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. மேற்படி திருத்தியமைக்கப்பட்டதனை நடைமுறைப்படுத்த மாவட்ட அரசிதழில் சிறப்பினமாக வெளியிட வேண்டியுள்ளது. அதன் பொருட்டு துணைப் பணி மேலாளர், அரசு கிளை அச்சகம், மதுரை அவர்களின் கேட்பின்படி, ரூ. 10500/–ஐ செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.
<u>அலுவலகக்குறிப்பு :</u>
திருத்தியமைக்கப்பட்ட உரிமையாணை கட்டணங்களை மாவட்ட அரசிதழில் சிறப்பினமாக பிரசுரம் செய்ய துணைப் பணி மேலாளர், அரசு கிளை அச்சகம், மதுரை அவர்களின் கேட்பின்படி, ரூ. 10500/–ஐ நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>31.07.2023</td>
<td>334</td>
<td>

<u>பொருள் எண். 03</u>

களக்காடு நகராட்சியில் 2022–2023ம் ஆண்டு **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்** கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 30.06.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி சரிபார்க்கப்பட்டு, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பு நோக்கு செய்யப்பட்டு கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்தகாரர் பெயர்</th><th>மதிப்பீடு ( ரூ. லட்சத்தில்)</th><th>மதிப்பீட்டினை விட கூடுதல்/ குறைவு (சதவீதத்தில்)</th></tr>
<tr><td colspan="5">சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022–2023</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி, 12வது வார்டு ஆவுடைவிலாஸ் தெருவில் போர் அமைத்து மின் மோட்டாருடன் 1 சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல்.</td><td>திரு. ஜா. ஜஸ்டின் பிரதீப்</td><td rowspan="2">2.25</td><td>மதிப்பீட்டின் விலைக்கு</td></tr>
<tr><td>திரு. பிரம்மநாயகம்</td><td>1.42% அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">2.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி 20வது வார்டு மீன்கடை சந்து தெருவில் மின் மோட்டாருடன் 1 சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல்.</td><td>திரு. ஜா. ஜஸ்டின் பிரதீப்</td><td rowspan="2">1.85</td><td>மதிப்பீட்டின் விலை ்கு</td></tr>
<tr><td>திரு. பிரம்மநாயகம்</td><td>1.52% அதிகம்</td></tr>
</table>

<u>அலுவலகக்குறிப்பு :</u>

வ.எண். 1 மற்றும் 2ல் கண்டுள்ள பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திரு. ஜா. ஜஸ்டின் பிரதீப் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் பதிவு செய்யலாம்.

</td>
<td>பார்வையிட்டு பதிவு செய்யப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>31.07.2023</td>
<td>335</td>
<td>

<u>பொருள் எண். 04</u>

களக்காடு நகராட்சியில் 2022–2023ம் ஆண்டு **பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டத்தின்** கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 30.06.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி சரிபார்க்கப்பட்டு, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பு நோக்கு செய்யப்பட்டு கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

</td>
<td>பார்வையிட்டு பதிவு செய்யப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்தகாரர் பெயர்</th><th>மதிப்பீடு<br>( ரூ. லட்சத்தில் )</th><th>மதிப்பீட்டினை விட கூடுதல்/ குறைவு<br>(சதவீதத்தில்)</th></tr>
<tr><td colspan="5">பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2022-2023</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி 9வது வார்டு சிங்கம்பத்தில் பல்நோக்கு மையக் கட்டிடம் அமைத்தல்.</td><td>திரு. வில்சன்</td><td rowspan="2">9.80</td><td>0.13% குறைவு</td></tr>
<tr><td>திருமதி.என்.எம். புஷ்பம்</td><td>2.67% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u>
மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திரு. வில்சன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் பதிவு செய்யலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.07.2023</td>
<td>336</td>
<td>
<u>பொருள் எண். 05</u>
களக்காடு நகராட்சியில் 2022-2023ம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் சாலைகள் மற்றும் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் குடிநீர் திட்ட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 16.06.2023 அன்று பெறப்பட்ட கீழ்கண்டவாறான மறு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்குவைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்தகாரர் பெயர்</th><th>மதிப்பீடு<br>( ரூ. லட்சத்தில்)</th><th>மதிப்பீட்டினை விட கூடுதல்/ குறைவு<br>(சதவீதத்தில்)</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சியில் வார்டு எண். 23, சிதம்பராபுரம் கிறிஸ்துராஜபுரம் T.D.T.A பள்ளித் தெருவில் (171023R0280) பேவர் பிளாக் சாலை அமைத்தல்.</td><td>திரு. இராதாகிருஷ்ணன்</td><td rowspan="2">7.90</td><td>0.08% குறைவு</td></tr>
<tr><td>திரு. ஜா. ஜஸ்டின் பிரதீப்</td><td>1.03% அதிகம்</td></tr>
</table>
</td>
<td>பார்வையிட்டு பதிவு செய்யப் பட்டது.</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | களக்காடு நகராட்சியில் வார்டு எண். 18. கோட்டை விஸ்வகர்மா தெரு (ரோடு) (171018R0234) பேவர் பிளாக் சாலை அமைத்தல். | திரு. ஜா. ஜஸ்டின் பிரதீப் | 11.30 | 1.02% அதிகம் |
| | | திருமதி. என்.எம். புஷ்பம் | | 0.05% குறைவு |
| 3. | களக்காடு நகராட்சியில் வார்டு எண். 10, பாரதிபுரம் கீழத்தெரு வடக்கு (171010S0054) பேவர் பிளாக் சாலை அமைத்தல். | திரு. ஜெயராஜ் | 4.00 | 0.08% குறைவு |
| | | திரு. கைலாஷ் குமார் | | 6.00% அதிகம் |
| 4. | களக்காடு நகராட்சியில் 2023-2024ம் நிதியாண்டில் வார்டு எண். 01 முதல் 27 வரை உள்ள குடிநீர் விநியோக பம்பிங் மெயின் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்பு மற்றும் பழுதுகளை பழுது நீக்கம் செய்யும் பணி. | திரு. ஜா. ஜஸ்டின் பிரதீப் | 4.60 | மதிப்பீட்டின் விலைக்கு |
| | | திருமதி. என்.எம். புஷ்பம் | | 7.97% அதிகம் |

<u>**அலுவலகக்குறிப்பு :**</u>

வ.எண். 1ல் கண்ட பணிக்கு 0.08% குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திரு. இராதாகிருஷ்ணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியையும், வ.எண். 2ல் கண்ட பணிக்கு 0.05% குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திருமதி.என்.எம். புஷ்பம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியையும், வ.எண். 3ல் கண்ட பணிக்கு 0.08 % குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திரு. ஜெயராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியையும் மற்றும் வ.எண். 4ல் கண்ட பணிக்கு மதிப்பீட்டின் விலைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திரு. ஜா. ஜஸ்டின் பிரதீப் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியையும் மன்றம் பதிவு செய்யலாம்.

<table>
<tr><td>31.07.2023</td><td>337</td><td>
<u>பொருள் எண். 06</u><br>
களக்காடு நகராட்சிக்கு 15வது நிதிக்குழு மான்யத் திட்டம் 2022–2023ன் கீழ் ரூ. 59.54 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி நிதியில் ஏற்கனவே ரூ. 44.70 இலட்சத்திற்கு குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ளவும், ரூ. 14.00 இலட்சத்திற்கு பொது சுகாதார பணிக்கான மின்கல வாகனம் கொள்முதல் செய்யவும் நிர்வாக அனுமதி வழுங்கப்பட்டு மேற்படி பணிகள் நடைபெற்று வருகிறது. அனுமதிக்கப்பட்ட மானியத் தொகையில் மேற்கண்ட இரு பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை ரூ. 58.70 இலட்சம் போக மீதமுள்ள ரூ. 0.84 இலட்சத்திற்கு 2 எண்ணம் நீர்மூழ்கி மின் மோட்டார்கள் கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண். 18277/ 2022/சிஎப்சி–1, நாள். 11.05.2023ன்படி நிர்வாக அனுமதி வழுங்கப்பட்டதனை தொடர்ந்து, மேற்படி மின்மோட்டார்கள் கொள்முதல் செய்ய கீழ்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்தப் புள்ளி கொடுத்த ஒப்பந்த காரர் பெயர்</th><th>மதிப்பீடு<br>( ரூ. லட்சத் தில்)</th><th>மதிப்பீட்டி னை விட கூடுதல்/ குறைவு<br>(சதவீதத்தில்)</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சியில் குடிநீர் திட்டத்திற்காக நீர்மூழ்கி மின் மோட்டார் 40 LPM x 70m Head 2 எண்ணம் சப்ளை செய்தல்.</td><td>திரு. ஜா. ஜஸ்டின் பிரதீப்</td><td rowspan="2">0.84</td><td>மதிப்பீட்டின் விலைக்கு</td></tr>
<tr><td>திருமதி. என்.எம். புஷ்பம்</td><td>8.38%<br>அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டின் விலைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திரு. ஜா. ஜஸ்டின் பிரதீப் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் பதிவு செய்யலாம்.
</td><td>பார்வையிட்டு பதிவு செய்யப் பட்டது.</td></tr>
<tr><td>31.07.2023</td><td>338</td><td>
<u>பொருள் எண். 07</u><br>
களக்காடு நகராட்சியானது பேரூராட்சியாக இருந்த கால கட்டத்தில் 01.11.2021க்கு முன்பு தனி அலுவலரால் கொண்டு வரப்பட்ட அவசரக்கூட்ட தீர்மான எண். 138, நாள். 11.06.2018ன்படி, நடைமுறையில் இருந்து வந்த குடிநீர் துணை விதிகளை திருத்தம் செய்து 01.10.2018 முதல் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தீர்மானத்தின் அடிப்படையில் திருத்திய குடிநீர் துணை விதிகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டான
</td><td>அரசு விதிமுறைக ளை பின்பற்றி நடைமுறைப் படுத்த அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | அரசிதழ் அறிவிக்கை செய்யப்படாமல் உள்ளது. எனவே, அரசிதழில் சிறப்பினமாக வெளியிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>களக்காடு சிறப்புநிலை பேரூராட்சியாக இருந்த போது தீர்மான எண். 138, நாள். 11.06.2018ன்படி, நடைமுறையில் இருந்து வந்த குடிநீர் வழங்கல் உப விதிகள் திருத்தி வெளியிடப்பட்ட நாள் முதல் 30 நாள்கள் வரை (09.08.2018) பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணை ஏதும் பெறப்படாத நிலையில் 01.10.2018க்கு பின்னர் வழங்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கு திருத்திய துணை விதிகளை இறுதிப்படுத்திட நகர்மன்ற தீர்மான எண். 179, நாள். 06.12.2018ன்படி, அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>எனவே, மேற்கண்ட துணை விதிகளை முன் தேதியிட்டு நடைமுறைப்படுத்தும் வகையில் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய அனுமதிக்கலாம். மேலும் அதற்கான செலவுத் தொகையினை நகராட்சியின் வருவாய் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 31.07.2023 | 339 | **<u>பொருள் எண். 08</u>**<br>இந்நகராட்சி வார்டு எண். 20, கதவு எண். 36பி/1, வியாசராஜபுரம் பஸ்ஸ்டாண்டு தெருவில் உள்ள அரசு பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதிக்கு சொத்துவரி விலக்கு கோரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அவர்களின் கடிதம் ந.க.எண். ந4/13977/2022, நாள். 18.05.2023ன்படி கோரப்பட்டுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 86 (ஊ)-ன்படி, கல்வி நோக்கங்களுக்காக பயன்படும் கட்டிடங்கள் மாணவர்கள் கல்வி பயிலும் பொருட்டான தங்கும் விடுதிகள், ஆதரவற்றோர் மற்றும் அனாதை சிறுவர்கள் தங்குமிடம் போன்ற கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்களிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட அரசு பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதிக்கு 2012-2013ம் ஆண்டு முதல் 2023-2024 ம் ஆண்டு வரை விதிக்கப்பட்ட சொத்துவரி தொகை ரூ. 43020/-ஐ நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | உரிய சட்டவிதிமுறைகளை பின்பற்றி நடைமுறைப் படுத்த நீக்கம் செய்ய அனுமதிக்கப் பட்டது. |

| 31.07.2023 | 340 | **பொருள் எண். 09**<br>களக்காடு நகராட்சியில் 2023-2024 ஆம் நிதியாண்டில் அலுவலக பயன்பாட்டிற்கு, கீழ்கண்ட எழுது பொருட்கள் மற்றும் படிவங்கள் தேவைப்படுகிறது. கீழ்கண்ட பொருட்களை ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்திடவும், அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு. | அரசு நிர்ணயித்துள் ள விலைப் பட்டியலுக்கு உட்பட்டு வாங்க அனுமதிக்கப் பட்டது. |
|---|---|---|---|

| வ. எண் | பொருட்கள் விபரம் | எண்ணிக் கை |
|---|---|---|
| 1. | ஊதிய பதிவேடு | 10 |
| 2. | பகிர்வு பதிவேடு | 10 |
| 3. | தன் பதிவேடு | 10 |
| 4. | சுருக்கப் பதிவேடு | 7 |
| 5. | நகர்வு பதிவேடு | 10 |
| 6. | பணப் பதிவேடு | 8 |
| 7. | நகர்மன்ற தீர்மான புத்தகம் | 5 |
| 8. | ஒப்பந்த பதிவேடு | 5 |
| 9. | சொத்துவரி பெயர் மாற்ற பதிவேடு | 10 |
| 10. | வருவாய் நிதி சிட்டா | 10 |
| 11. | தொழில்வரி பதிவேடு | 10 |
| 12. | வழக்கு பதிவேடு | 5 |
| 13. | 100 பக்கங்கள் கொண்ட நோட்டு (பெரியது) | 50 |
| 14. | முன் பண பதிவேடு | 5 |
| 15. | 12A டோனர் | 20 |
| 16. | 88A டோனர் | 20 |
| 17. | எப்சன் ரிப்பன் | 20 |
| 18. | Intend Book | 20 |
| 19. | வைப்புத் தொகை பதிவேடு | 10 |
| 20. | மூடுதாள் | 1000 |
| 21. | File Pad | 500 |
| 22. | எப்சன் 664 கலர் டோனர் | 10 |
| 23. | எழுது பலகை | 15 |
| 24. | தூய்மை பணியாளர்கள் வருகை பதிவேடு | 20 |
| 25. | புதிய சொத்துவரி வரிவிதிப்பு பதிவேடு | 27 |
| 26. | புதிய குடிநீர் குழாய் பதிவேடு | 10 |
| 27. | Log Book | 10 |
| 28. | அலுவலக உறை (Office Cover) | 1000 |
| 29. | அலுவலக உறை (Office Cover-White Cover) சிறியது | 200 |
| 30. | படிவம் 2 இறப்பு அறிக்கை | 500 |
| 31. | 4A படிவம் (இறப்பு) | 500 |
| 32. | 4 படிவம் (இறப்பு) | 500 |
| 33. | பிறப்பு விண்ணப்பம், பிறப்பு உறுதி மொழி படிவம் | 500 |
| 34. | குண்டூசி | 10 (பாக்) |
| 35. | Tin Tag Bundle | 50 |
| 36. | பசை டப்பா | 10 |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>37.</td><td>Stamp Pad</td><td>30</td></tr>
<tr><td>38.</td><td>A4 Paper</td><td>50 (பாக்)</td></tr>
</table>
<br>
<u>அலுவலகக் குறிப்பு</u><br>
2023-2024ம்ஆண்டிற்கு அலுவலகத்திற்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் படிவங்களை ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்யவும், அதற்காகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.07.2023</td>
<td>341</td>
<td>
<u>பொருள் எண். 10</u><br>
களக்காடு நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் தட்டச்சர் பணியிடம் அனுமதிக்கப்பட்டு நிரப்பப்படாமல் உள்ளது. மேலும், புள்ளி விவரக் குறிப்பாளர் பணியிடம் தோற்றுவிக்கப்படவில்லை. இதனால், கணினி சார்ந்த பணிகளை மேற்கொள்ள போதிய பணியாளர் இல்லை என்பதால், 2023-2024 ஆம் நிதியாண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர் ஒருவரை நியமனம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>
<br>
<u>அலுவலகக் குறிப்பு</u><br>
களக்காடு நகராட்சியின் தட்டச்சுப் பணிகள், திட்டப்பணிகள் குறித்த அறிக்கைகள் மற்றும் இதர கணினி சார்ந்த பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் ஏற்கனவே பணியாற்றி வரும் நபரை நியமிக்கலாம். அதற்கான செலவினத் தொகையினை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அலுவலகக் குறிப்பின்படி, ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் கணினி தட்டச்சுப் பணி செய்து வரும் செல்வி.ச. நஸ்ரின் மீரா என்பவர் தொடர்ந்து பணி செய்யவும், மாத ஊதியம் ரூ. 20,000/- ஐ நகராட்சி வருவாய் நிதியில் இருந்து வழங்கவும் அனுமதித்து தீர்மானிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>31.07.2023</td>
<td>342</td>
<td>
<u>பொருள் எண். 11</u><br>
களக்காடு நகராட்சிக்கு 15வது நிதிக்குழு மான்யத் திட்டம் (Tied Grant) 2022-2023ன் கீழ் 7 எண்ணம் மின்கல வாகனம் (Battery Operated Vehicle) கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனங்களின் மின்கலன்களுக்கு மின்னேற்றம் செய்ய போதுமான சுவிட்ச் போர்டு மற்றும் அது சார்ந்த அமைப்புகள் இல்லை என்பதால், ஆற்றங்கரை OHT வளாகத்தில் உள்ள வாகன நிறுத்துமிடத்தில் 10 எண்ணம் சுவிட்ச் போர்டு மற்றும் மின்சாதன அமைப்புகள் நிறுவிட தேவையான மின் உதிரி பாகங்களை உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்யவும், அதற்கான
</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>உத்தேச மதிப்பீடு ரூ. 15,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br><u>அலுவலகக் குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் அதற்காகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>31.07.2023</td><td>343</td><td><u>பொருள் எண். 12</u><br>களக்காடு நகராட்சி 24வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து கீழ்கண்ட பணி செய்ய கேட்டு வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.<br>1. வார்டு எண். 23, சிதம்பராபுரம் மினி டேங்க் சேதம் அடைந்து உள்ளதால் அதை இடித்து அப்புறப்படுத்துதல்.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>களக்காடு நகராட்சி 23வது வார்டு மினி டேங்கானது கட்டப்பட்டு 25 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட நிலையில் தற்போது பழுதடைந்துள்ளது. எனவே, அதனை பொதுநலன் கருதி இடித்து அப்புறப்படுத்த நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம். அதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>பார்வையிட்டு அனுமதிக்கப் பட்டது.</td></tr>
<tr><td>31.07.2023</td><td>344</td><td><u>பொருள் எண். 13</u><br>களக்காடு நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களிடமிருந்து கீழ்கண்ட பணி செய்ய கேட்டு வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.<br>1. வார்டு எண். 10, சிவசண்முகபுரம் கிழக்கு பகுதியில் சிறுபாலம் மற்றும் வாறுகால் அமைத்தல்.<br>2. பாரதிபுரம் கீழத்தெரு காந்தி சிலை எதிர்புறம் சிறுபாலம் அமைத்தல். மேற்கண்ட பணிகளுக்கு ரூ. 3.50 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>மேற்கண்ட பணிகளுக்கான உத்தேச மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>பார்வையிட்டு அங்கீகரிக்கப் பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 31.07.2023 | 345 | **<u>பொருள் எண். 14</u>**<br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் ஒப்பந்ததாரர்களால் முடிக்கப்படும் திட்டப்பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட 1% முன் வைப்புத் தொகை, 5% கூடுதல் வைப்புத் தொகை, 1% தக்கவைக்கப்படும் தொகை ( Retention Amount) மற்றும் ஒப்பந்தப்புள்ளி கிடைக்காதவர்கள் செலுத்திய முன்வைப்புத் தொகை, மேலும் ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட காலங்கடந்த வைப்பு தொகைகளை ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பத்தின் அடிப்படையில், ஒப்பந்ததாரர்களுக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>நகராட்சி பகுதியில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்படும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டு திரும்ப வழங்க தகுதியான தொகைகளை ஒப்பந்ததாரர்களின் விண்ணப்பத்தின் அடிப்படையில் ஒப்பந்ததாரர்களுக்கு திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம். மேலும் அதற்காகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | தணிக்கை விதிகளுக் குட்பட்டு வழங்க அனுமதிக்கப் பட்டது. |
| 31.07.2023 | 346 | **<u>பொருள் எண்.15</u>**<br>களக்காடு நகராட்சிக்கு பிற அலுவலகங்களில் இருந்து வரப்படும் கடிதங்களுக்கு பதில் அனுப்பும் வகையில் கடிதங்களுக்கு ஒட்ட அஞ்சல் வில்லை இருப்பு இல்லை என்பதால் ரூ. 2000/-மதிப்பிற்கு அஞ்சல் வில்லைகள் தபால் அலுவலகத்தில் இருந்து பெற்று இருப்பு வைத்துக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>களக்காடு நகராட்சிக்கு பிறஅலுவலகங்களில் இருந்து வரப்பெறும் கடிதங்களுக்கு உரிய பதில் கடிதம் அனுப்பும் பொருட்டு தபால் உறைகளில் ஒட்டுவதற்கான அஞ்சல் வில்லைகள் இருப்பு இல்லாமையால் ரூ. 2000/- மதிப்பிலான அஞ்சல் வில்லைகள் வாங்கி பயன்படுத்தவும், இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும்அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது. |

<table>
<tr>
<td>31.07.2023</td>
<td>347</td>
<td>
<u>பொருள் எண்.16</u><br>
நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர்கள், துணை மேயர்கள், மன்றத் தலைவர்கள், மன்றத் துணைத்தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கும் வகைக்கு தமிழ்நாடு அரசால் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்</th><th>மதிப்பூதியம் மாதம் ஒன்றுக்கு</th></tr>
<tr><td>1.</td><td>நகர் மன்றத் தலைவர்</td><td>ரூ. 15,000</td></tr>
<tr><td>2.</td><td>நகர்மன்ற துணைத்தலைவர்</td><td>ரூ. 10,000</td></tr>
<tr><td>3.</td><td>நகர்மன்ற உறுப்பினர்கள்</td><td>ரூ. 5,000</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1. அரசாணை (நிலை) எண். 98, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 13.07.2023 என்ற அரசாணையை மன்றம் பதிவு செய்யலாம்.<br>
2. 2023-2024ஆம் ஆண்டு வரவு செலவில் திருத்திய மதிப்பீடு தொகை ரூ.19.20 லட்சம் வருவாய் மூலதன நிதியில் இருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>பார்வையிடப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>31.07.2023</td>
<td>348</td>
<td>
<u>பொருள் எண்.17</u><br>
களக்காடு நகராட்சி 2021-2022ம் ஆண்டுக்கான ஆண்டுகணக்குகள் திட்டப்பணிகள் மற்றும் திட்ட செலவினங்கள் அனைத்தும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை அலுவலர்களால் தணிக்கை மேற்கொண்டு தணிக்கை அறிக்கைகள் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தணிக்கை துறையினரால் வழங்கப்பட்ட 2021-2022ம் ஆண்டுக்கான தணிக்கை பத்திகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
<u>2021-2022ம் ஆண்டுக்கான மொத்தப் பத்திகள் விபரம்</u>
<table>
<tr><th>வ. எண்.</th><th>பத்திகளின் விபரம்</th><th>வருவாய் மற்றும் மூலதன நிதி பத்தி எண்கள்</th><th>குடிநீர் வடிகால் நிதி பத்தி எண்கள்</th><th>மொத்தம்</th></tr>
<tr><td>1.</td><td>சிறப்பு பத்திகள்(செ.அ)</td><td>7, 9, 10, 11, 12, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34(அ,ஆ), 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43,</td><td>-</td><td>40</td></tr>
</table>
</td>
<td>பார்வையிடப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>

<table>
<tr><td></td><td></td><td>44, 45, 46(அ,ஆ), 47, 52, 53</td><td></td><td></td><td></td></tr>
<tr><td>2.</td><td>சாதாரண பத்திகள் (செ.அ)</td><td>5, 8, 13, 23, 48, 49, 50, 51, 54, 55, 56, 57, 58, 59</td><td>-</td><td>14</td><td>14</td></tr>
<tr><td>3.</td><td>சிறப்பு பத்திகள் (ஆணையர்)</td><td>11, 12, 13, 14, 15, 16, 17, 19, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 38, 40(ஆ)</td><td>-</td><td>21</td><td>21</td></tr>
<tr><td>4.</td><td>சாதாரண பத்திகள் (ஆணையர்</td><td>9(அ,ஆ,), 10, 18, 20, 21, 34, 35, 36, 41, 42, 44, 45, 46, 47, 48</td><td>9, 12, 13, 14</td><td>20</td><td>20</td></tr>
<tr><td colspan="5">மொத்த பத்திகள்</td><td>95</td></tr>
</table>

<u>அலுவலக குறிப்பு:</u><br>
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

</td><td></td></tr>
<tr><td>31.07.2023</td><td>349</td><td>

<u>பொருள் எண்.18</u><br>
களக்காடு நகராட்சியில் 2022-2023ம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள 19.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது, பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி சரிபார்க்கப்பட்டு, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பு நோக்கு செய்யப்பட்டு கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்தகாரர் பெயர்</th><th>மதிப்பீடு ( ரூ. லட்சத்தில்)</th><th>மதிப்பீட்டினை விட கூடுதல்/ குறைவு (சதவீதத்தில்)</th></tr>
<tr><td></td><td colspan="4">நமக்கு நாமே திட்டம் 2022-2023</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">வார்டு எண். 08, நாகன் குளம் கீழ்பகுதியில் தடுப்புச்சுவர் கட்டும் கணி</td><td>திரு. ஜா. ஜஸ்டின் பிரதீப்</td><td rowspan="2">7.18</td><td>0.21% அதிகம்</td></tr>
<tr><td>திரு. என்.எம் புஷ்பம்</td><td>0.02% குறைவு</td></tr>
</table>

</td><td>பார்வையிடப் பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td rowspan="2">2.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி, வார்டு எண். 12, 171012R0179– நகரத் தெரு மேல குறுக்கு (ரோடு) பேவர் பிளாக் சாலை அமைத்தல்.</td><td>திரு. ஜா. ஜஸ்டின் பிரதீப்</td><td rowspan="2">4.20</td><td>மதிப்பீட்டின் விலைக்கு</td></tr>
<tr><td>திரு. என்.எம் புஷ்பம்</td><td>4.24% அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">3.</td><td rowspan="2">களக்காடு நகராட்சி, வார்டு எண். 13, 171013L0066– கப்பலோட்டிய தமிழன் தெற்கு தெரு 3வது சந்து பேவர் பிளாக் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல்.</td><td>திரு. ஜா. ஜஸ்டின் பிரதீப்</td><td rowspan="2">3.39</td><td>மதிப்பீட்டின் விலைக்கு</td></tr>
<tr><td>திரு. என்.எம் புஷ்பம்</td><td>3.54% அதிகம்</td></tr>
</table>
<br>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
வ.எண். 1 ல் கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. என்.எம் .புஷ்பம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினையும், வ.எண். 2ல் கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ஜா. ஜஸ்டின் பிரதிப் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினையும், வ.எண்.3ல் கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ஜா. ஜஸ்டின் பிரதீப் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினையும் மன்றம் பதிவு செய்யலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.07.2023</td>
<td>350</td>
<td>
<u>பொருள் எண்.19</u><br>
களக்காடு நகராட்சிக்கு தேவையான கணனி மற்றும் பிரிண்டர்களை சப்ளை செய்ய 19.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது, பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி சரிபார்க்கப்பட்டு, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பு நோக்கு செய்யப்பட்டு கீழ்கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.
</td>
<td>அலுவலகக் குறிப்பின்படி, குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் மூலம் வாங்க அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்தகாரர் பெயர்</th><th>மதிப்பீடு ( ரூ. லட்சத்தில்)</th><th>மதிப்பீட்டினை விட கூடுதல்/ குறைவு (சதவீதத்தில்)</th></tr>
<tr><td></td><td colspan="4">பொதுநிதி திட்டம்</td></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">களக்காடு நகராட்சிக்கு தேவையான கணினி மற்றும் பிரிண்டர்களை சம்பளை செய்து நிறுவுதல் பணி.</td><td>டிஜிடெக், சங்கரன் கோவில் மெயின்ரோடு, திருநெல்வேலி.</td><td rowspan="2">4.95</td><td>0.03% குறை</td></tr>
<tr><td>எம். ராஜா, 91/ஏ, ஆம்பூர் மெயின் ரோடு, விக்கிரமசிங்கபுரம்</td><td>25.22% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u>
வ.எண். 1 ல் கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள DEGITEC, ராமையன்பட்டி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.07.2023</td>
<td>351</td>
<td>
<u>பொருள் எண்.20</u>
களக்காடு நகராட்சியில் 2022-2023 ஆம் நிதியாண்டில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் களக்காடு நகராட்சி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியருக்கான கழிப்பிடம் கட்டும் ரூ. 18.00 இலட்சம் மதிப்பீட்டிலான பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.
<u>அலுவலகக்குறிப்பு :</u>
நமக்கு நாமே திட்டத்தின் கீழ் களக்காடு நகராட்சி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியருக்கான கழிப்பிடம் கட்டும் பணிக்கு மொத்த மதிப்பீட்டில் பாதி தொகையான ரூ. 9.00 இலட்சத்தினை பொதுமக்கள் பங்களிப்பு தொகையாக வழங்கிய ஸ்ரீனிவாசன் சேவைகள் அறக்கட்டளை, திருக்குறுங்குடி என்ற அமைப்பின் மூலம் மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>பார்வையிடப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>31.07.2023</td>
<td>352</td>
<td>
<u>பொருள் எண்.21</u>
களக்காடு நகராட்சியில் நகர்மன்ற உறுப்பினர்களால் வழங்கப்பட்ட கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.
</td>
<td>பார்வையிடப் பட்டது.</td>
</tr>
</table>

| வ. எண். | வார்டு எண். | கோரிக்கை விபரம் |
|---|---|---|
| 1. | 2 | மஞ்சுவிளை தெரு, மஞ்சுவிளை மேலத்தெரு, நடுத்தெரு, காந்திநகர் தெற்கு தெரு, கீழப்பத்தை பெருமாள் சன்னதி தெரு ஆகிய தெருக்களில் சாலை வசதிகள் செய்தல் மற்றும் குடிநீர் குழாய் புதிதாக அமைத்தல். |
| 2. | | மஞ்சுவிளை வடக்கு தெருவில் மின்விளக்குகள் அமைத்தல். |
| 3. | 5 | மேலக்கருவேலன்குளம் கீழரதவீதியில் இரண்டு மின்விளக்குகள் அமைக்கும் பணி. |
| 4. | | கீழப்பத்தை பண்டிதன்குறிச்சி சாலையில் குடிநீர் பகிர்மான குழாயினை மேலாக அமைக்கும் பணி. |
| 5. | | கீழப்பத்தை பண்டிதன்குறிச்சி ஓதுவார் தெருவில் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி. |
| 6. | | மேலக்கருவேலன்குளம் பிள்ளையார் கோவில் தெருவில் கழிவுநீர் ஓடை அமைக்கும் பணி. |
| 7. | | மேலக்கருவேலன்குளம் கோனார் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி. |
| 8. | | மேலக்கருவேலன்குளம் சுடுகாடு கொட்டகை பராமரிக்கும் பணி. |
| 9. | 6 | காட்டுநாயக்கன் தெருவில் வாறுகால் அமைக்கும் பணி. |
| 10. | | வடமலைசமுத்திரம் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி. |
| 11. | 7 | கீழக்கருவேலன்குளம் தெற்கு தெருவில் சாலை மற்றும் வடிகால் வசதி செய்தல் பணி. |
| 12. | 14 | வெப்பல் தெருவில் கழிவு நீர் ஓடை மற்றும் பொதுநல்லி அமைத்து தருதல். |
| 13. | 19 | வியாசராஜபுரம் பிள்ளைமார் தெரு, முஸ்லீம் வடக்கு தெரு, சேனையர் தெரு ஆகியவற்றில் சாலை வசதிகள் அமைக்கும் பணி. |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>14.</td><td rowspan="3">26</td><td>மேலக்கட்டளை தெருவில் வாறுகால் அமைக்கும் பணி.</td></tr>
<tr><td>15.</td><td>மேலக்கட்டளை தெருவில் ஆழ்துளை கிணறு மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல்.</td></tr>
<tr><td>16.</td><td>களந்தை ஜின்னா பூங்காவை பராமரித்தல்.</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>மேற்கண்டவாறு நகர்மன்ற உறுப்பினர்களால் வழங்கப்பட்ட கோரிக்கைகள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கு மதிப்பீடு தயாரித்து நகராட்சியின் நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு, முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.07.2023</td>
<td>353</td>
<td><u>பொருள் எண்.22</u><br>களக்காடு நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள பழுதான தெருவிளக்குகளை உடன் சரி செய்திட தேவையான மின் உபகரணங்கள் கொள்முதல் செய்ய ரூ. 3.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>அவசர அவசியம் கருதி தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கான மின் உபகரணங்களை கொள்முதல் செய்ய மேற்கண்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம். உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>அரசு நிர்ணயித்துள்ள விலை விகிதத்திற்கு உட்பட்டு மின் விளக்கு உதிரி பாகங்கள் வாங்க அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>